**02.04.2026 RLTOP.No. 1/2025 Starting Time : 3.51 p.m.**

**<u>ம.சா.1</u> திரு. நித்தியானந்தம் த/பெ. இரங்கநாதன்.**

**(சாட்சி எதிர்மனுதாரர் தரப்பில் மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் குறுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்).**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1).** எனக்கு ஜெகந்நாதன், பிரியா என இரண்டு குழந்தைகள் என்றால் சரிதான். பிரியாவின் கணவர் தான் எதிர்மனுதாரர் தினகரன் என்றால் சரிதான். இருவருக்கும் 2009ம் வருடம் திருமணம் நடந்தது என்றால் 2010ல் நடந்தது. 2009ல் நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரிதான். எனது மகள் பிரியா ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.20/2019 என்ற வழக்கில் சொத்துக்களில் 1/3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தும் அசல் வழக்கு எண்.20/2019ல் ஒரு சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாக வழக்கில் இந்த மனுவுடன் சேர்ந்து மொத்தம் 96 அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**2).** எனது மகள் சொத்துக்களில் பாகம் கோரி கடந்த 2018ஆம் ஆண்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு முன்பு வரை நாங்கள் சுமூகமாக தான் இருந்து வந்தோம் என்றால் தற்போதும் சுமூகமாக தான் இருந்து வருகிறோம். இந்த மனு சொத்தை யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் மீனாம்மாள் என்பவரிடமிருந்து 1998ல் கிரயம் பெற்றேன். பூர்வீக சொத்தை விற்பனை செய்து தான் இந்த மனுச் சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல, எனது சொந்த உழைப்பினால் நான் கிரயம் பெற்ற சொத்துக்கள் ஆகும். மனுச் சொத்தில் எதிர்மனுதாரர் பிரிண்டிங் மெஷின் பொருத்துவதற்காக மனுச் சொத்தை இடித்து சேதப்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளபட்சத்தில், எந்த வருடம் அவ்வாறு செய்தார் என்றால் 2009ல் அவ்வாறு செய்தார். அப்போது நிச்சயதார்த்தம் நடந்து விட்டது என்றால் சரிதான்.

**3).** அவ்வாறு ரூ.50,000/- நஷ்டம் ஏற்படும் வகையில் சேதப்படுத்தவில்லை என்றும், மேலும் ஏற்பட்ட சேதத்தை எதிர்மனுதாரரே சரி செய்துவிட்டார் என்றால்

சரியல்ல, நானும் நஷ்டயீடு கேட்கவில்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, எனது மனுவிலோ மற்றும் எனது பிரமாண வாக்குமூலத்திலோ எந்த வருடம் இவ்வாறு நஷ்டம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். ரூ.50,000/- நஷ்டயீடு தொகையை எதிர்மனுதாரர் எனக்கு தர சம்மததித்தார் என்று நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. தற்போது வாடகை பாக்கி இல்லை என்றால் சரிதான். வாடகையை உயர்த்தி தர சொல்லி நேரடியாகவோ, எழுத்துமூலமாகவோ கேட்னோ என்றால் நேரடியாக கேட்டேன். நேரடியாக நான் கேட்டதை எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மனுச் சொத்தில் இருந்து எதிர்மனுதாரர் காலி செய்துவிடுவதாக என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல, நான் காலி செய்ய சொன்னதற்கு அவரே இரண்டு வருடம் அவகாசம் கேட்டார்.

**4**). பாகப்பிரிவினை கேட்டு எனது மகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் வாடகை வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் கடை ஊழியரான பிரதாப் என்பவர் மூலமாக வாடகை தொகையை என்னிடம் கொடுத்தபோதும் நான் வாங்க மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல. பிறகு எதிர்மனுதாரர் வாடகை தொகையை எனக்கு மணியார்டர் மூலமாக அனுப்பியதை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். இதுவரை மணியார்டர் மூலமாக தான் எனக்கு வாடகை தொகையை எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் RLTOP. 2/2025 மனுவும் இந்த எதிர்மனுதாரர் மற்றும் எனது மகள் பிரியா மீது வேறு ஒரு சொத்திற்காக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். RLTOP.2/2025 மனு சொத்திற்காகவும் பிரியாவிற்கு தெரியாமல் எதிர்மனுதாரரே எனக்கு வாடகை பணத்தை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல, இருவரும் தான் செலுத்தி வருகிறார்கள்.

**5**). வாடகை ஒப்பந்தத்தை எழுதி பதிவு செய்துக் கொள்ளலாம் என நான் எழுத்துமூலமாகவோ, வாய்மொழியாகவோ எதிர்மனுதாரரிடம் கேட்டேனா என்றால் வாய்மொழியாக தான் கேட்டேன். நான் கடந்த 26.12.2018ல் மனுச் சொத்தில் ரூ.50,000/- சேதப்படுத்தி விட்டார் என வழக்கறிஞர் மூலமாக எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு எதிர்மனுதாரர் 23.01.2019ல்

பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். மீண்டும் இந்த மனுச் சொத்து சம்பந்தமாக திரு. நேதாஜி வழக்கறிஞர் மூலமாக மற்றொரு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை, ஆரணி வழக்கறிஞர் மூலமாக அனுப்பினேன். அதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் அனுப்பிய பதில் அறிவிப்பில் உமது கட்சிக்காரருக்கு வாடகை ஒப்பந்தம் எழுதி பதிவு செய்துக் கொள்ள வருமாறு அறிவுறுத்தவும் என குறிப்பிட்டு எனது வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த பதில் அறிவிப்பை நான் சரியாக படித்து பார்க்கவில்லை.

**6).** புதிய நடைமுறைசட்டப்படி வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்துக் கொள்ள நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல, நான் தான் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்து கொள்ள அவர்களை அழைத்தேன், அவர்கள் வர மறுத்து விட்டார்கள். புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தினால் காலி செய்வதற்கு கால தாமதமாகிவிடும் என்றும், நகராட்சிக்கு சொத்து வரி விதிப்பு அதிகமாகிவிடும் என்ற காரணத்தினால் நான் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல, நான் தான் எதிர்மனுதாரரிடம் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள கேட்டேன். எதிர்மனுதாரர் மனுச் சொத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் அட்வான்ஸ் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாடகை தொகையை எதிர்மனுதாரரே உயர்த்தி மணியார்டர் மூலம் அனுப்பினார் என்றால் சரிதான்.

**7).** மனுச் சொத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சியின் அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை, எதிர்மனுதாரர் மனுச் சொத்தில் இருந்து காலி செய்தால் தான் நான் வாங்க முடியும். புதிய வாடகை சட்டப்படி மனுச் சொத்திற்கு புதிய வாடகை ஒப்பந்தம் எழுதி பதிவு செய்துக் கொள்ளலாம் என அறிவிப்பு ஏதும் எதிர்மனுதாரருக்கு அனுப்பினேனா என்றால் இல்லை, நேரில் அழைத்து சொன்னேன். நான் எதிர்மனுதாரரிடம் பேசி 5 ஆண்டுகள் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. எனது மகள் என் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததால் தான் நான் பொய்யான காரணம் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுச் சொத்திற்கு ரூ.50,000/-சேதமானது என்று நான் கூறியுள்ளபட்சத்தில், அதற்கு சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை.

**8**). எதிர்மனுதாரர் இரண்டு மாத வாடகையாக ரூ.12,000/-ம் அனுப்பினார் என்றும், அதை நான் இழப்பீடு தொகை ரூ.50,000/-த்திற்காக ரூ.12,000/- எடுத்துக் கொண்டு மீதம் ரூ.38,000/- தரவேண்டும் என எதிர்மனுதாரருக்கு நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அவ்வாறு தான் நான் நினைத்தேன், ஆனால் மேற்படி ரூ.12,000/- வாடகை தொகை என கூறியவுடன் நான் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என அழைத்தேன், அவர்கள் வரவில்லை. எதிர்மனுதாரரிடம் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என நான் நேரில் அழைத்த விவரத்தை கடந்த 2024ம் ஆண்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**9**). மனுச் சொத்து கட்டிடம் நல்ல நிலையில் உள்ளது என்றும், என் மீது பாகப் பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததால் தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுச் சொத்திலும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மனுச் சொத்திற்கான வாடகை ஒப்பந்தம் ரத்து ஆகவில்லை, அமலில் உள்ளது என்றால் சரியல்ல. பொய்யான காரணங்கள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 4.36 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.